# எட்டுத்தொகை அகநூல்களில் செவிலித்தாய்

**முனைவர் பீ. பெரியசாமி,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,

ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம் - 632317,

தமிழ்நாடு, இந்தியா,

ORCID : https://orcid.org/0000-0002-7395-9699

**ஆய்வுச்சுருக்கம்**

உலகில் முதன்மையான, உன்னதமான உறவு தாய்மையாகும். எந்தநிலையிலும் எவ்விதச்சூழலிலும் தன்னைமறந்து, தான் பெற்றபிள்ளைகளுக்காகவே வாழ்பவள்தாய். பயன்கருதாத தொண்டு, தியாகம், தன்னலமற்றப் பெரும்பண்பு இவைதாய்மை. இதனால் தான் ஒருதாய் உலகவாழ்க்கையில் நடமாடும் தெய்வமாகிறாள். அகஇலக்கியத்தாயரும் அவ்வழிச்சேர்ந்தவர்களே. தலைவியிடம்தாய் கொண்ட அன்பு அவளைவளர்ப்பதில் மட்டுமல்லாமல் தலைவி இல்லறவாழ்விலும் இணைந்து செயல்படுகின்றாள். தலைவிஉடன் போக்குச் சென்றப்பின்பு உடன் போக்குநிகழ்வதற்கு முன்னர்வீட்டில் இருந்ததலைவியின் இயல்புவாழ்க்கையை நினைத்துப்புலம் புவதாகத்தாய் கூற்றுப்பாடல்கள் அமைந்துள்ளன. தலைவியின் உடன்போக்கிற்குப்பின்பும் செவிலிநற்றாயிடம் அறத்தொடுநின்றுதமரின் உடன்பாட்டுடன்நாடறியமணம் செய்விக்க முனைவதைக்காண முடிகிறது. செவிலிதலைவியின் குடும்பத்துடன் நெருங்கிய உறவுடையவள். அவள் பொருளுக்குப்பணிபுரியும் பணிமகள் அல்லள். மேம்பாட்டுடன் வாழ்பவள். தலைவியைவளர்ப்பதில் அன்புணர்வும் சிறந்தகடமையுணர்வும் கொண்டவள்தாய் என்பதை அறிய முடிகிறது. இலக்கணத்தில் செவிலி-நற்றாய் என இரு சொற்களில் அழைத்தாலும், இலக்கியத்தில் இருவருமே 'அன்னை' என்றே அழைக்கப்படுகின்றனர். தலைவி-தோழிஉறவும், நற்றாய் –செவிலிஉறவும் ஒன்றுபட்டு விளங்குவதை அறியமுடிகிறது.

**முக்கியச்சொற்கள்**

சங்க இலக்கியம், எட்டுத்தொகை நூல்கள், அகஇலக்கியம், நற்றாய், செவிலித்தாய், தலைமக்கள், உறவுநிலை

**முன்னுரை**

ஞாலம் தோன்றியது முதற்கொண்டு ஆயிரக்கணக்கான உயிரினகள் தினந்தோறும் அதனதன் வாழ்வியலுக்கு ஏற்பத் தோன்றி வாழ்ந்து மடிந்து வருகின்றன. மனிதனும் இதற்கு விதிவிலக்கானவன் அல்ல. என்றாலும், அவன் மற்ற உயிரினங்களிலிருந்து மாறுபட்டவன். ஒரு மொழியைப் பேசக் கற்றுப் பழகி, நாகரிகத்தின் எல்லைக்குள் நுழைந்த மனிதன் தனது வளர்ச்சியை மேலும் உயர்த்தி கொண்டு, உறவுகளைக் கண்டறிந்து, அவற்றை வளர்ப்பதன் அடிப்படையில் சமூகத்தையும் வளர்த்தெடுக்க

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR 

முனைகின்றனர். அவ்வுறவுகள் தாய், தந்தை, குழந்தைகள், உடன்பிறப்புகள், இன்ன பிற உறவுகள், இவை சாராத சமூக உறவுகள் என்று விரிந்து பரவுகின்றன. இவற்றை நிலைநிறுத்தவும், வளர்த்தெடுக்கவும் நம் முன்னோர்கள் பல ஒழுக்க நெறிமுறைகளை தமக்குள் வகுத்துக் கொண்டனர். அவ்வாறு வகுத்துக் கொண்ட ஒழுக்க நெறிகளையே நாம் இன்றளவும் கடைப்பிடித்து வருகிறோம். இதனையே நாம் மரபுத் தொடர்ச்சி என்கிறோம். பல ஆயிரம் ஆண்டுகளாகச் செழித்து விளங்கிய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு, நாகரிக நிலையைச் சங்க இலக்கியங்கள் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

சங்க கால நம் நாகரிகம், அக்காலத்தில் சிறந்து விளங்கிய பிற நாகரிகங்களுள் மேலோங்கியதாக விளங்குகிறது. இதனை, சங்க இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன. இத்தகுச் சிறப்பு மிகுந்த காலத்தில் பெண்களின் நிலை போற்றுதற்குரிய சமுதாயத்தில் பெண்கள் தமக்கே உரிய சிறந்த இடத்தையும் பெற்றிருந்தனர். இக்காலத்தில் ஆண்மை, பெண்மைக் குறித்த கருத்தாக்கம் முற்றிலும் இயற்கையைச் சார்ந்திருந்தது. நிலஉடைமைச் சமூகத்தின் வெளிப்பாடாக பெண் உரிமைப் பொருளாகக் கருதப்பட்டாலும் பெண் விருப்பம் தன் இயல்பாகவே செயல்பட்டது.

சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையானவைகள் அகப் பாடல்கள். காதல் நிலையில் தலைமை மாந்தர்களுக்கு உதவும் துணைமைமாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் தோழி, பாணன் ஆகியோருக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கவள் செவிலித்தாய். எட்டுத்தொகை அகப்பாடல்களில் செவிலித்தாயின் இயல்புகளையும், செவிலித்தாய் சங்கப் புலவர்களால் படைக்கப்பட்டுள்ள திறத்தையும், அவள் மகள் வளர்ப்பிலும், குடும்ப நிர்வாகத்திலும், அன்பு நிலையிலும் சிறந்து விளங்கினாள் என்பதையும் எட்டுத்தொகை அக இலக்கியப் பாடல்களின்வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தாய்மை**

பெண்ணால் மட்டுமே அனுபவித்து உள்வாங்கி வெளிப்படுத்தக்கூடிய அபூர்வமான ஒரு உணர்வு தாய்மை எனப்படுகிறது. கவிஞர்கள் தாய்மையின் சிறப்பைப் பாடலாம். ஆனால் அந்த உணர்வைக் கருப்பொருளாக்கி ஆழமாகவும், அழுத்தமாகவும் வெளிப்படுத்தப் பெண் கவிஞர்களால் மட்டும்தான் முடியும் . கடல்நீரைச் சுமந்து வானில் மெல்ல அசைந்து செல்லும் கார்காலத்துக் கரிய மேகத்தைக் காண்கிறார் நன்னாகையார்என்னும் சங்கப் பெண்புலவர். நிறைமாதக் கருப்பிணி ஒருத்தி மெள்ள அசைந்தபடி நடந்து செல்லும் காட்சியை அது அவளுக்கு நினைவுப்படுத்துகிறது. மேலும், புளிப்புச் சுவையின் மீது வேட்கைக் கொண்ட கருவுற்ற பெண்கள், வயிற்றுச் சூலின் சுமையைப் பொறுத்துக் கொண்டபடி தள்ளாடி நடப்பதைப் போல நீர்கொண்ட மேகங்கள் வானில் ஏறமாட்டாமல் தத்தளித்துத் தவிப்பதாகக் காட்சிப்படுத்துகிறாள். இதனை,

**“முந்நால் திங்கள் நிறை பொறுத்து அசைஇ**
**ஒதுங்கல் செல்லாப் பசும் புளி வேட்கைக்**
**கடுஞ்சூல் மகளிர் போல” (குறுந். 287.)**

எனும் அடிகளால் உணர முடிகிறது. புளிப்பு சுவையைக் கருக்கொண்ட பெண்கள் விரும்புவது உலக இயல்பு எனும் குறிப்பு இவற்றால் பெறப்படுகிறது. இக்கருத்தை,

**"புளிங்காய் வேட்கைத் தன்றுநின்**
**மலர்ந்த மார்பிவள் வாயாஅ நோய்க்கே" (ஐங். 51)**

எனும் பெருந்தேவனாரின் பாடலாலும் அறிய முடிகிறது.ஒக்கூர் மாசாத்தியார் என்ற புலவர், மழையால் தழைத்துச் செழித்திருக்கும்முல்லைநிலக் காட்டுக்கு உவமை கூற, மென்மையான தாய்க்கிளி அருமையாக வளர்த்த முதிர்ச்சியடையாத கிளிக் குஞ்சின் இறகைப் போல அக்காட்டில் பயிர்கள் வளர்ந்திருப்பதாக வருணிக்கிறார்.

**"தளிரியல் கிள்ளை இனிதினின் எடுத்த**
**வளராப் பிள்ளைத் தூவி அன்ன**
**உளர்பெயல் வளர்த்த பைம் பயிர்ப் புறவில்" (அகம். 324)**

எனும் பாடலில் வளர்ச்சியடையாத கிளிப்பிள்ளையின் இறகைப் பற்றிக் கூறுகிறார். மற்றொரு பாடலில் காட்டுப்பூனையிடமிருந்து தன் குஞ்சுகளைக் காக்க முயலும் போது பெட்டைக்கோழி எழுப்பும் சத்தத்தை ஊராரின் அலர் பேச்சுக்கு உவமையாக்குகிறார். இதனை,

**"மனை உறை கோழிக் குறுங் காற் பேடை**
**வேலி வெருகினம் மாலை உற்றன" (குறுந். 139.)**

எனும் பாடலால் அறிய முடிகிறது. இவ்வாறு ஈன்று புறந்தருதல்' தாயின் தலையாய கடமையாகக் கொண்ட சங்கச் சமுதாயத்தில் பாடல்கள் புனையும் தருணத்தில் கூடப் பெண்ணின் தாய்மை நலம் சார்ந்த சொந்த அனுபவங்களே வெளிப்படுவதை உணர முடிகிறது.

**சங்ககால தாயார்**

தாய் என்பதுஓர் உறவே எனினும் அவ்வுறவானது மற்ற உறவுகளைக் காட்டிலும் மேன்மையுடையது. எல்லா உறவுகளுக்கும் அடிப்படையாய் இருப்பது. தாய் உறவானது அகம், புறம் எனப்பாகுபாடு செய்து சங்க நூல்கள் விளக்குகின்றன. அதாவது, தாயரைப் புறத்திணைத் தாயார், அகத்திணைத் தாயார் என்று இருவகைப்படுத்துவர். புறத்திணையில் கூறப்பட்டுள்ளதாயானவள் தன் மகன் மேல் கொண்ட அன்பினால் அவனை வீரனாகவும், சான்றோனாகவும் ஒழுக்க மேம்பாடு உடையவனாகவும் உருவாக்கியுள்ளாள். ஆனால், அகத்திணைத் தாயார் தன் மகள் மேல் கொண்ட அன்பினால் அவளை இல்லறவாழ்வில் ஈடுபடுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளாள். புறத்திணையில் வரும் தாயார் அனைவரும் நற்றாய் என்றே கூறலாம். அகத்திணையில் நற்றாய், செவிலித்தாய் என்ற இருவரைத் தாய் என்றே தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. தாய் மகளை இல்லற நெறிக்கண் செலுத்துவதிலும், ஒழுக்கமேம்பாடும், குடிப்பெருமையும் எடுத்துரைத்து, கற்பொழுக்கத்தை வலியுறுத்தி நன்னெறியில் நிறுத்தி

இல்லறத்தில் நெறிப்படுத்துவதும் தாயின் குறிக்கோளாக இருந்திருக்கிறது. ஒருத்தி பெற்றக் குழந்தையை மற்றவள் வளர்க்கும் நிலையைக் கொண்டு அவளை வளர்ப்புத்தாய் என்று கூறுவதைக் காணமுடிகிறது. அவ்வாறு வளர்க்கும் தாயாரை 'ஈனாத் தாயார்' என்று இலக்கண உரையாசிரியர்கள் சுட்டிக் கூறுவர். ஆனால், இலக்கியஉரைகளில் வளர்ப்புத் தாயைச் செவிலியர் என்று சுட்டுவதைக் காணமுடிகிறது.

**"ஈனாத் தாயார் மடுப்பவும் உண்ணாள்"**(அகம்.105)

என்கிறது அகநானூறு பாடல்.

தலைவனால் விரும்பப்பட்ட வேற்று மகளிரும் தாயார் என்று கூறுவதற்கு உரியர். இதனை, குடை நிழலில் தோன்றும் புதல்வனைக் கண்டு தலைவன் பெற்ற மகன் இவனே என்று கருதி மனை வாயிலைக் கடந்து வந்த தாயார் தடுப்ப அவளிடத்தே தலைவன் தங்கினான் என்று தோழி தலைவியிடம் கூறுவதில் இருந்து பரத்தையரும் தாயார் என்ற உண்மையை அறியமுடிகிறது.

**"குடை நிழல் தோன்று நின் செமம் லைக் காணூஉ,**
**இவன் மன்ற யான் நோவ உள்ளம் கொண்டு, உள்ளா**
**மகன் அல்லான் பெற்ற மகன் என்று அகல்நகர்**
**வாயில் வரை இறந்து பொத்தந்து, தாயார்**
**தெருவில் தவிர்ப்பத் தவிர்ந்தனன்"** (கலி.84)

என்ற பாடலிலிருந்து, சங்க காலத்தில் பெற்றவள் மட்டுமின்றி அக்குழந்தையை வளர்ப்பவர்களும் அன்பு பாராட்டுகின்றவர்களும் தாய்என்றழைக்கப்பட்ட மரபு இருந்தமை நமக்குப் புலப்படுகிறது.

**தொல்காப்பியம் கூறும் தாய்**

தொல்காப்பியம் 'தாய்' என்ற ஒரு சொல்லைப் பொதுவாகக் கொண்டு நற்றாயையும் செவிலித் தாயையும் குறிப்பிட்டுள்ளது.

**"தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்"**(தொல்.1084)

என்ற நூற்பாவில் 'தாய்' என்பது செவிலித் தாயைக் குறிக்க வந்தது என்பதை உரையாசிரியர்களின் வழி அறியமுடிகிறது. செவிலி தலைவிக்கு நெருக்கமாய் இருந்து முதன்மை பெறுதலை நச்சினார்க்கினியர்,

**"நற்றாய் இல்லறம் நிகழ்த்தும் கருத்து வேறு உடைமையின் உற்று நோக்காள்,செவிலியே தலைவியை உற்று நோக்கி ஒழுகுவாள்"**(ஜெ.பிருந்தாஸ்ரீ, சங்க இலக்கியத்தில் தாய், ப.4)

என விளக்குகிறார். இலக்கணங்கள் கூறும் நற்றாய்-செவிலி ஆகியோர் தலைவியின் காதல் வாழ்க்கையில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுகின்றனர். நற்றாய் தலைவியைப் பெற்றவள், செவிலித்தாய் வளர்த்தவள். இலக்கியங்களைப் பொறுத்தவரை இவ்விருவருக்கும் வேறுபாடு காண்பது அரிதாகவே உள்ளது. தொல்காப்பியர் செவிலித்தாயைப் பற்றிக் குறிக்கும்போது,

**"ஆய்பெருந்சிறப்பின் அருமறை கிளத்தலின்**
**தாயெனப் படுவோள் செவிலியாகும்"**(தொல்.1070)

என்கிறார். இதற்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர்,

**"தாய்த்தாய்க்கொண்டு உயிர் ஒன்றாய் வருகின்றாள் என்று ஆராய்ந்து துணியப்பட்ட பெருஞ்சிறப்புக் காரணமாகக் கூறுதற்கரிய மறை பொருளெல்லாம் குறிப்பானன்றிக் கூற்றாற் கூறத்தக்காளாதலின் தாய் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவாள் செவிலியேயாம். எனவே**

**ஈன்ற தாயினும் களவின்கண் சிறந்தாள் இவளென்றார். கற்பிற்கு இருவரும் ஒப்பாராயிற்று"**(ஜெ.பிருந்தாஸ்ரீ, சங்க இலக்கியத்தில் தாய், ப.4)

என்று கூறுவதிலிருந்து நற்றாயைக் காட்டிலும் கூற்றிற்கு மிகுதியும் உரிமையுடையவள் செவிலியே என்றும், வழிவழியாய்த் தலைவியின் குடும்பத்திற்குத் தோழியாகவும், செவிலியாகவும் வாழும் கொள்கையை அறிய முடிகிறது. தோழி தலைவியை 'அன்னை' எனக் கூறுவதும், தலைவி அவ்வாறே தோழியை 'அன்னை' என அழைப்பதும் மரபு. தலைவனை என்னை-என் தலைவன், அன்னை-என்தாய் எனவும் அழைப்பர். இதனை,

**"அன்னை என்னை என்றலும் உளவே**
**தொன்னெறி முறைமை சொல்லினம் எழுத்தினும்**
**தோன்றா மரபின என்மனார் புலவர்"** (தொல்.1192)

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். தாய் கூற்று கூறுதற்குறியவர் இன்னார் எனவும் அவர்கள் எச்சமயங்களில் கூற்று நிகழ்த்துவர் எனவும் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறுகின்றார். பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி, நற்றாய் போன்றவர்கள் பற்றியகோட்பாடுகளைத் துறைகளாக வகுத்துக் கூறவில்லை. மாறாகப் பாத்திரங்களின் கூற்றாக வைத்தே செயல் நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார். அவர்கள் எச்சமயங்களில் கூற்று நிகழத்துவர் எனவும் வரையறுத்துக் கூறுகின்றார்.

**"பார்பான் பாங்கன் தோழி செவிலி**
**சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியொடு**
**அளவியல் மரபின் அறுவகை யோரும்**
**களவினில் கிளவிக் குரியர் என்ப"** (தொல்.1445)

என்ற நூற்பாவில், நற்றாய் செவிலித்தாய் இருவரில், செவிலித்தாயே கூற்றிற்கு உரியவளாகின்றாள். நற்றாய்க்குரிய கிளவிக் கூறுகளை வரையறுக்கும் தொல்காப்பியர் அவளுக்கெனத் தனியிலக்கணம் கூறவில்லை. மாறாக,

**"தாய்க்கும் வரையார் உணர்வுஉடம் படினே"** (தொல்.1062)

என்று கூறிச் செவிலிக்குரிய இலக்கணங்கள் நற்றாய்க்கும் பொருந்தும் என்கின்றார்.

**"களவு அலராயினும், காமம் மேற்படுப்பினும்,**
**அளவுமிகத் தோன்றினும், தலைப்பெய்து கணினும்,**
**கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்**
**ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்,**
**ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்**
**காதல் கைம்மிக கனவில் அரற்றலும்**
**தோழியை வினாவலும், தெய்வம் வாழ்த்தலும்**
**போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்**
**கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்**
**பிரிவின் எச்சத்தும், மகள் நெஞ்ச வலிப்பினும்**
**இருபால் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்**
**இன்ன வகையில் பதின்மூன்று கிளவியோடு**

**அன்னவை பிறவும் செவிலி மேன"** (தொல்.1061)

களவில் செவிலித்தாய் கூற்று நிகழ்த்தும் இடங்கள் பதிமூன்று என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

**செவிலித் தாயின் இயல்பு**

செவிலி என்பவள் தலைவியின் வளர்ப்புத் தாயாவாள். அவளது இயல்பை,

**"செவிலியும் தோழி போலவே தலைமகளைப் பேணுதல், அவளது நலனில் இன்றுதல், தலைவியை நன்முறையில் வளர்க்க நற்றாய்க்கு உதவுதல் எனத் தலைவியை வளர்க்கும் முக்கியப் பொறுப்பு அனைத்திலும் செவிலியில்லாமல் இல்லை."**(முகிலரசி, கி. "சங்க இலக்கியத்தில் நால்வகைப் பெண்டிரின் பங்களிப்பு", *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, மலர்-1, இதழ்-1, ஜூலை 2016, ISSN -2454-3993, ப.74)

என்கின்றனர். மேலும், தலைவி பிறந்தநாள் தொட்டு அவளைச் சிறப்பாகப் போற்றி வளர்த்து வருபவளும் தலைவியின் தோழியை ஈன்ற தாயுமாவாள். அவள் வாழ்வில் எப்போதும் அக்கறையுடையவள் செவிலித்தாய் என்பதை,

**"தலைவியும் மேற்கொண்ட களவொழுக்கம் கற்பில் சிறந்த பின் இருவரும் நடத்தும் இல்லறம் கண்டு செவிலி. கற்பு வாழ்க்கை நிலையினை கண்டு பெருமை கொள்கிறாள்."**(தனலெட்சுமி, க. "சங்க இலக்கியத்தில் பெண் வாயில்களின் ஆளுமைப் பண்புகள்", *International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR)*, E-ISSN: 2582-5313, Volume: 02 Issue: 01 January to March 2020, www.irjtsjournal.org)

என்கிறார் க. தனலெட்சுமி. மேலும்,

**"தொல்காப்பியர் கூறும் அகத்திணை மாந்தர்களுள் சிறப்பாகக் கருதத்தக்கவள் செவிலியாவாள். நற்றாயைவிட செவிலித்தாயும் தோழியும் தலைவியின் காதல் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்"**(ஜோஸ்பின் புனிதா, அ. "தலைவியின் வாழ்வில் செவிலியின் பங்கு", *வலைத்தமிழ்,* ISSN: 2581-7132, 09. Apr. 2013.)

என்கிறார் அ. ஜோஸ்பின் புனிதா.

தலைவியொடு தோழி எத்தகைய நட்பும் நெருக்கமும் உடையவளாக விளங்குகிறாளோ அத்தகைய நட்பும் நெருக்கமும் உடையவளாக நற்றாயொடு செவிலி விளங்குகின்றாள். இதனை தமிழ்ச்செல்வன்,

**"செவிலி நற்றாய் தோழி யாகி**
**அவல நீக்கி அறிவும் ஆசாரமும்**
**கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே!"**(க. தமிழ்ச்செல்வன், நம்பியகப்பொருள், ப.21.)

எனக் கூறியுள்ளார். செவிலி, தலைவியின் குடும்பத்துடன் மிகநெருக்கமான தொடர்புடையவள். செவிலி பொருளிற்காகப் பணி செய்யும் பணிமகள் போலின்றிக் குடும்பத்தில் மேம்பாடான நிலையில் இருந்து தலைவியை வளர்ப்பதில் அன்புணர்வும், கடமையுணர்வும் கொண்டு செயல்படுகிறாள். நற்றாய் தலைவியைத் தழுவியதாகவோ, அவளுடன் உறங்கியதாகவோ சான்றுகள் இல்லை. ஆனால் செவிலி தலைவியின் பக்கத்தில் உறங்கியதாகவும், தலைவியைத் தழுவியதாகவும் சான்றுகள் உள்ளன. அவை,

**"பெயர்த்தனென் முயங்க, யான் வியர்த்தனென் என்றனள்**
**இனி அறிந்தேன், ஆகுதலே**
**கழல்தொடிஆஅய் மழைதவழ் பொதியில்**

**வேங்கையும் காந்தளும் நாறி**

**ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே" (குறுந்.84)**

என்பதிலிருந்து தலைவி இரவில் செவிலித்தாயைத் தழுவி உறங்கினாள் என்பதை அறியமுடிகிறது. செவிலியின் மகளாகவே தலைவி கூறப்படுகிறாள். செவிலியின் கணவனைப் பற்றியோ அவள் வாழ்க்கை பற்றியோ வேறு எந்தக் குறிப்பும் கிடைக்கவில்லை. தலைவி, தோழி இருவருக்கும் நற்றாயைவிடச் செவிலியிடம் நெருக்கமான உறவு அமைந்திருக்கிறது. தலைவி, தோழியின் மூலமாகவே தன் எண்ணங்களைச் செவிலிக்குத் தெரிவிப்பாள். தோழி செவிலியிடம் பேசியதாகப் பலபாடல்கள் காணப்படுகின்றன. அவை,

**"வித்திய வென்முளை களவன் அறுக்கும்**

**கழனி ஊரன் மார்உற மரீஇ**

**திதலை அல்குல் நின்மகள்**

**பசலை கொள்வது எவன்கொல்? அன்னாய்" (ஐங்.29)**

என்றப் பாடலின் மூலம் தலைவனைத் தலைவிக்கு மணமுடிக்க வேண்டித்தோழி செவிலித் தாயிடம் அறத்தொடு நிற்கின்றாள். தலைவியின் காதல், சமூகக்கட்டுப்பாடு, நற்றாய் தந்தையரின் எதிர்பார்ப்பு ஆகிய நிலைகளை இணைக்கும் பாலமாகச் செவிலி விளங்குவதைக் காணமுடிகிறது. மேலும், செவிலி தலைமகளிடத்து மிகுந்த பாசம் கொண்டவள் என்பதை,

> **"உணர்வு மிக்கவளாகக் காணப்படுகிறாள். வெறியாட்டு பற்றிய செயல்களைக் காணும்போது தலைவி மீது கொண்டுள்ள பாச உணர்வு வெளிப்படுகிறது. தலைவி உடன்போக்குச் சென்ற பிறகு செவிலி நற்றாயிடம் அறத்தொடு நின்று தமரின் உடன்பாட்டுடன் நாடறிய நல்மணம் செய்விக்க விழைகின்றாள். இவற்றாள் செவிலியின் மனஉணர்வும் கடமையுணர்வும் பொறுப்புணர்வும் வெளிப்படுவதனை அறியமுடிகின்றது."**(வசந்தி, ச. "அகவாழ்வியலில் செவிலி", *அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்*, Vol:2, ISSUE:5, ISSN: 2582-399X, ஜனவரி-2020, ப.21)

என்பதிலிருந்து நாம் அறியமுடிகிறது.

**செவிலி - நற்றாய் இடையேயான உறவு**

தலைவியை அவளது இளமைப்பருவம் முதற்கொண்டு வளர்ப்பவள்செவிலித்தாய். தலைவியை வளர்ப்பதில் நற்றாயை விட செவிலிக்கு அதிகப்பொறுப்பும் பங்கும் உள்ளது. தலைவியைத் தன் மகளெனப் போற்றிவளர்த்ததால் செவிலிக்குத் தலைவியின் உடன்போக்கு பெரும் பாதிப்பைத்தருவதாகிறது. தலைவியை அன்புடன் வளர்க்கும் செவிலி தலைவியைப் பற்றிக்குறிப்பிடும் போதெல்லாம் "என் மகள்" என்றே குறிக்கும் நிலையைச் எட்டுத்தொகை அகப்பாடல்களின் வழி அறியமுடிகிறது.

**"முன்நாள் உம்பர்க் கழிந்த என் மகள்" (நற்.198)**

என்றும்,

**"மெல்லெனத் தழீ இயினேனாக, என்மகள்"(அகம்.49)**

என்றும்,

**"சிலம்பு நக இயலிச் சென்ற என் மகட்கே"(அகம்.117)**

என்றும் செவிலி பல இடங்களில் என்மகள் என்று குறிப்பிடுவதை அறியமுடிகிறது. இவை தவிர நற்றாயும் தலைவியைப் பற்றிச் செவிலியிடம்கூறும்போது,

**"தெறுவது அம்ம நும்மகள் விருப்பே"(ஐங்.313)**

எனக் கூறுகிறாள்.

தலைவியை வளர்த்த காரணத்தாலும், அவள்மேல் உள்ள அன்புகாரணமாகவும் செவிலி, தலைவியை என்மகள் என்று உரிமையுடன் கூறுகிறாள். தலைவி மீது கொண்ட அன்பினால் செவிலியின் எண்ணங்கள்தலைவியைச் சுற்றியே வட்டமிடுகின்றன. இதனாலேயே செவிலி தலைவி சுரம்சென்ற நிலையை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்துக் கலங்குகிறாள்.தலைவியை வளர்ப்பதிலிருந்து உடன்போக்கு சென்ற தலைவியைத் தேடிச்செல்லும் நிலை வரை செவிலி மேற்கொள்ளும் அரும்பணிகளில் அவளின் அன்புவெளிப்படுவதை அறியலாம்.

**செவிலி கூற்று**

செவிலித்தாய் கூற்றாக மொத்தம் – 43 பாடல்கள் எட்டுத்தொகை அக இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவை கலித்தொகையில் – 01, ஐங்குறுநூற்றில் -14, குறுந்தொகையில் – 09, நற்றிணையில்-02, அகநானூற்றில் -17 என பாடப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு

- கலித்தொகையில் – பா.9.
- ஐங்குறுநூறு – பா.380, 389, 390, 401, 402,403, 404, 405, 406, 407, 408, 409, 410.
- குறுந்தொகை – 15, 44, 84, 144, 167, 242, 356, 378, 396.
- நற்றிணை – 192, 198
- அகநானூறு – 7, 17, 49, 63, 89, 117, 145, 153, 189, 207, 219, 263, 321, 369, 383, 385, 397.

**தலைவியின் இல்லற வாழ்வும் செவிலியின் புகழுரையும்**

தலைவி தலைவனோடு உடன்போக்கு மேற்கொண்டு இல்லறம்நடத்தும் சிறப்பினை பல எட்டுத்தொகை அக இலக்கியப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.தலைவியின் உடன் போக்கினை நினைத்து தன்னுள் வருந்தியசெவிலித்தாய், செம்பொன்னால் ஆகிய பாத்திரத்தில் அழகிய பொரியோடுகலந்த பாலையும் உண்ணாதவளான என்மகள் அந்த பாலை நிலத்தில் உலர்ந்தவெப்பத்தையுடைய கலங்கல் நீரை தவ்வென்னும் ஓசைபட குடிக்க எவ்வாறுவலியளானாள் என்று கூறினாள். இதனை,

**"வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய"(குறுந்.356)**

என்னும் பாடலடியால் அறியலாம்.தலைவி தலைவனோடு உடன்போக்கு மேற்கொண்டாள். அவளதுஇல்லறச் சிறப்பைக் காண செவிலி சென்றாள். சென்றவள், தலைவி அடிசில்ஆக்கும் திறமும், தலைவனின் அன்போடு இயைந்த பாராட்டுமொழிகளும்அப்புகழ்மொழியால் தலைவி செருக்குக் கொள்ளாது அகத்தே மகிழும் பண்பும்மிக்கவளாகத் திகழ்ந்து தலைவனோடு இல்லறம் நடத்தும் முறையைக் கண்டுவியந்து, அதை நற்றாயிடம் கூறி மகிழ்கிறாள். இதனை,

**"நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"(குறுந்.167)**

என்னும் பாடலடியால் அறியலாம்.

தலைவியின் வீட்டில் சென்று வந்த செவிலித்தாய் நற்றாயிடம்அந்த நம்பியும் நம் மகளும் மகனை இடையில் படுக்க வைத்து அவர்கள்இருமருங்கும் படுத்திருப்பது காண்பதற்கு இனிய காட்சியாகும்


© 2026, IRJTSR

.இக்காட்சியானது இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் பெறுவதற்கு அரியஒன்றாகும் எனக் கூறினாள். இதனை,

**“ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே”(ஐங்.401)**

என்ற பாடலடி புலப்படுத்தும்.

திருவள்ளுவரும் இல்லறத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.இவ்வுலகத்தில் வாழ வேண்டிய முறைப்படி வாழ்கின்றவன், மேலுலகத்திலுள்ளதேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவான் என்பதை,

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும்”(குறள்.50)**

என்னும் குறளில் விளம்பியுள்ளார்.

சங்ககாலத்தில் பெண்கள் தன் கணவனை தெய்வமாக மதித்துப்போற்றினர். கணவன் விருப்பப்படி இல்லறமும் நடத்தினர். ஆனால் இந்தகாலப்பெண்கள் சிலர் அதற்கு எதிர்மாறாக உள்ளார்கள்.தேன் கலந்த பாலை உண்ண மறுத்து ஓடிய சிறுபெண்பருவமடைந்து தானே தன் வாழ்க்கைத் துணையைத் தேடியடைந்து இல்லறம்நடத்தும் போது தன்னைப் பெற்றெடுத்த தந்தையின் மிகுந்த செல்வத்தைநினையாதவளாய், மறுபொழுது உண்ணும் உறுதிப்பாடு உடையவள்ஆயினாளே. இது வியப்பாய் உள்ளது என்று தலைவியின் இல்லறச் சிறப்பைக்கண்டு வியந்து செவிலி நற்றாயிடம் கூறினாள். இதனை,

**“பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே!”(நற்.110)**

என்ற பாடலடி விளக்கும்.

வீட்டில் செல்வச் செழிப்பில் வாழ்ந்த பெண் கணவன் வீட்டில்சென்று அங்குள்ள வறுமையை அனுசரித்துப் போகும் பாங்கு, சங்க இலக்கியப்பாடல்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. தலைவியைப் பற்றிக் கூறும்உறவுடையவளாக செவிலித்தாய் காட்டப்படுகிறாள்.

**தலைமக்கள் மீது அன்புடைய செவிலித்தாய்**

தலைவன் வினைமேற் சென்ற காலத்து தான் சென்ற இடத்திலேதங்குதலை விரும்பாதவனாய் தலைவி இருக்கும் இடத்தை நாடி வந்துவிடுகிறான். இது தலைவி மேல் உள்ள அன்பால் நிகழ்கிறது.தன் மகள் உடன்போக்குச் சென்றாலும், அவள் எவ்வாறுமகிழ்ச்சியாக இருக்கிறாள். இல்லற வாழ்க்கை எப்படி நடத்துகிறாள், தலைவன்தலைவி மேல் அன்புள்ளவனா என்பதை அறிவதிலிருந்து தன் மகள்மேல்கொண்ட அன்பை வெளிக்காட்டுகிறாள் செவிலி. அதனை நற்றாயிடம் சொல்லிமகிழ்கிறாள். இதனை,

**“வேந்துவிடு தொழிலொடு செலினும்**

**சேந்து வரல் அறியாது, செம்மல் தேரே”(குறுந்.242)**

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

**தலைமக்கள் உடன்போக்கினை ஏற்கும் செவிலித்தாய்**

தன் மகள் உடன்போக்குச் சென்றதை அறிந்த செவிலித்தாய்தனக்குள்ளே நின் மகள் இப்படிப்பட்ட தன்மையுடையவள், இப்படிப்பட்டஒழுக்கம் உடையவள் என்று புறங்கூறித் திரியும் பெண்டிர்கள் முன்னரேஎன்னிடத்தில் சொல்வார்கள். அதனை நான் கேட்ட பிறகும் அலரை மறைத்துவாழ்ந்து வந்தேன். ஆனால் அவளோ அவனுடன் சென்று விட்டாள். தலைவன்முன் செல்ல என் மகள் காட்டின் வழியாகச் சென்றாள். அவளுக்கு யாதும்இடையூறு ஏற்படாதவாறு, அவளுக்கு முன்னே சென்று அச்சிறிய

ஊரிலே,விருந்தாக அவர்களை ஏற்று உண்ண வைத்து தங்கும் இடத்திலும் இருத்திஉதவுவேன் என்று செவிலித்தாய் கூறினாள். இதனை,

**“மனைகெழு பெண்டுயான் ஆகுக மன்னே!” (அகம்.203)**

என்ற பாடலடி நிரூபிக்கும்.

சங்க காலத்தில் பெற்றோர்கள் மகளின் உடன்போக்கினை ஏற்றுக்கொண்டனர். அவள் நல்ல முறையில் கணவனுடன் வாழ்ந்தால் போதும் என்றுநினைத்தனர். அதற்காக வழிபடு தெய்வத்தையும் வேண்டி நின்றனர்என்பதிலிருந்து உறவுடையவர்களால் மட்டுமே தம் மகளின் உடன்போக்கினைஏற்க முடியும் என்பதை அறிய முடிகிறது.நற்றாயை விட செவிலிக்குத்தான் பாசம் அதிகம். இதனை சங்கப் பாடல்களின் வாயிலாக அறியமுடிகிறது.தலைவி தலைவனுடன் உடன்போக்கு போன பின்பு அவர்களைபாலை நிலத்தில் தேடிச் சென்ற செவிலி அவர்களைக் காணாமல் என் கால்கள்நடந்து நடந்து வருந்துகின்றன. எதிரே வருகிறவர்களைப் பார்த்துப் பார்த்து என்கண்கள் ஒளியை இழந்தன என்று வருந்தினாள். இதனை,

**“காலே பரிதப்பினவே: கண்ணே**

**நோக்கி நோக்கி வாள் இழந்தனவே” (குறுந்.44)**

என்பதால் அறியலாம்.

தலைவனோடு உடன்போக்குச் சென்ற தலைவியை நினைத்துசெவிலித்தாய், சென்ற வழியினையும் அவளது மென்மையினையும் எண்ணி,கற்களைக் கொண்ட நீண்ட இடத்தினைக் கொண்ட வழியில் தனது மெல்லியசிவந்த அடிகள் வருந்துமாறு எப்படி செல்கிறாளோ என வருந்தினாள். இதனை,

**“கொல்லை இரும்புனம் நெடிய என்னாது**

**மெல்லென் சேவடி மெலிய ஏக”(அகம்.89)**

என்ற பாடலடிகளால் அறியலாம்.

அருமையாக வளர்த்த மகள் எதிர்ப்பையும் தாண்டி தன்காதலனுடன் உடன்போக்குச் சென்றதை நினைத்து செவிலித்தாய்இரங்கத்தக்கவளாகிய என் மகள், அரிய வழியிலே, காதலனுடன் கடந்துசென்றாள், வீட்டில் இருக்கும் போது சிறிது கால் புரண்டால் கூட மனம்வருந்துபவள் அவள், அவளை நான் முதுகில் அடிக்க, எத்தகைய அசைவும்இன்றி நின்றாள், என் மகளை அடித்த என் கை பெரிய துன்பத்தை அடைவதாகஎன்று மகள் தலைவனோடு சென்றதை அறிந்த செவிலித்தாய் வருந்தினாள்.இதனை,

**“அமர்க்கண் அஞ்ஞையை அலைத்த கையே!”(அகம்.145)**

என்னும் பாடலடியால் அறியலாம். அடிக்கவும், அணைக்கவும் உரிமையுடையவர்கள்உறவுடையவர்களே என்பதை செவிலித்தாய் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**செவிலித்தாயின் ஆற்றாமை**

தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்டாள் என்பதைஅறிந்த செவிலி, அவளைத் தேடிச் சென்றாள். வழியில் பெண் மான் ஒன்றைக்கண்டு இளையமானே! அறிவினையுடைய அழகிய மகளே! நின் தோழியருடன்எங்கும் செல்லாதே நீ பேதைப் பருவத்தாள் அல்ல, பெதும்பைப் பருவத்தைஅடைந்துவிட்டாய் என்று கானவன் மகளாகிய என் மகளிடம் கூறினேன்.அவளும் நான் கூறியதைக் கேட்டாள். அவள் செய்த குற்றத்தை நான் அறிந்தபடியால் வீட்டின் அரிய காவலைக் கடந்து மானானது வலையிலிருந்து தப்பிஓடுவது போல, அவளும் வெண்மையான வேலினையுடைய

தலைவனோடுஇவ்வழியே சென்றாள், அவள் பின்னே தொடர்ந்து நான் ஓடி வந்தும் அவளைக்காண முடியவில்லை என்று தன் ஆற்றாமையைக் கூறினாள். இதனை,

**"பிற்படு பூசலின் வழிவழி ஓடி,**

**மெய்த் தலைப்படுதல் செல்லேன் இத்தலை,**

**நின்னோடு வினவல் கேளாய்!"(அகம்.7)**

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

**அறத்தொடு நிற்கும் செவிலி**

தலைவி தலைவனோடு உடன்போக்குச் சென்றதை தோழிசெவிலிக்கு அறிவிப்பாள். செவிலி அதை நற்றாய்க்கு எடுத்துக்கூறி அறத்தொடுநிற்பாள்.தலைவனோடு களவொழுக்கத்தில் இருந்து வந்த தலைவிஉடன்போக்கு மேற்கொண்டாள். இதனை தோழி செவிலிக்கு அறிவித்தாள்.செவிலி நற்றாயிடம் நின்மகள் வீரக் கழலையும், வேலினையும் உடையதலைவனோடு நட்பு கொண்டு, உடன்போக்குச் சென்று பின் மணம் புரிந்துகொண்டனர். இனி நீ செய்வது ஒன்றுமில்லை எனக் கூறிஅறத்தொடு நின்றாள்.இதனை,

**"சேயிலை வெள்வேல் விடலையொடு**

**தொகுவளை முன்கை மடந்தை நட்பே"(குறுந்.15)**

என்ற பாடலடிகள் தெரிவிக்கின்றன. இக்கருத்தின் மூலம் நற்றாயை விட தலைவியின் மேல் அன்பும்,அவள் நலன் அறிதலிலும் செவிலிக்கே மிகுந்த ஆர்வம் என்பது புலனாகிறது.இதே போன்று திருக்கோவையாரிலும் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்நிலையை,

**"திளையா வரும் அரு விக்கயி**

**லைப்பயில் செல்வியையே"(திருக்கோவையார், பா.294)**

என்ற பாடலடிகள் தெளிவுறுத்தும்.

**இரக்கம் கொண்ட செவிலியின் உறவு**

தலைவனுடன் தலைவி சென்றபின் செவிலித்தாய் அவளதுஇளமைத் தன்மையையும், பாலையின் வெம்மையையும் நினைத்து,இடைவிடாது விளையாடும் இயல்புடையவள் எப்படி ஆயத்தைப் பிரிந்து அரியநெறியில் தலைவனோடு சென்றாள். அது எளிது என்று கருதினாளோ? என்றுஇரங்கினாள். இதனை,

**"பாலும் உண்ணாள், பந்துடன் மேவாள்**

**விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே,**

**எளிதுஎன உணர்ந்தனள் கொல்லோ"(குறுந்.396)**

என்ற பாடலடிகள் மூலம் செவிலித்தாய் இரங்குவதைக் காணமுடிகிறது.

தலைவியின் இளமையை நினைத்து செவிலி, முலைகள்முழுமையாகத் தோன்றவில்லை, கூந்தல் முழுமையாக வளரவில்லை. நாக்கோதிருத்தமுறப் பேசவில்லை. இப்படிப்பட்ட இளமைப் பருவமுடைய இவளிடம்தலைவனுக்கு ஈடுபாடு உண்டானது எப்படி எனக் கூறி இரங்கினாள், இதனை,

**"முலையோ முழுமுற்றும் போந்தில மொய் பூங்குழல் குறிய**

**கலையோ வரையில்லை நாவோ குழறுங் கடன் மண்ணெல்லாம்"(திருவிருத்தம், பா.60)**

என்னும் பாடலடியால் அறியலாம்.

வாடைக் காற்றோ தீயைக் கொண்டுவந்து வீசுகின்றது. நிலவும்கொடி தீயை முகந்து கொண்டு வந்து சொரிகின்றது, கைகளிலிருந்தவளையல்கள் கழன்று விழுகிறது, உடல் முழுவதும் பசலை நிறம் பரவுகின்றது,இனி என் மகளுக்கு என்ன ஆகுமோ? என இரங்கினாள். இதனை,

**“சரிகின்றது சங்கந் தண்ணந் துழாய்க்கு வண்ணம் பயலை**

**விரிகின்றது முழுமெய்யுமென்னாங் கொலென் மெல்லியற்கே”(திருவிருத்தம், பா.47)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

தன்மகள் அவள் விரும்பிய காதலனோடு உடன்போக்குச்சென்றதை அறிந்த செவிலித்தாய் வருத்தம் அடைந்தாலும், தன் மகள் செல்லும்வழி அவள் வருத்தம் அடையும் வகையில் அமையாமல் விளங்கவேண்டும் எனஞாயிற்றை வேண்டுகிறாள். அவள் உண்ணுதற்கு நீர் நிறைந்தும், மரங்கள் நிழல் உடையதாகவும், ஞாயிறு தன் கதிர்களை சினம் தணிந்து வழங்க வேண்டும்எனவும் வேண்டுகிறாள். இதன் மூலம் செவிலி தலைவி மேல் வைத்துள்ள அன்புவெளிப்படுகிறது. இதனை,

**“ஞாயிறு காணாத மாண்நிழற் படீஇய”(குறுந்.378)**

என்ற குறுந்தொகைப் பாடலும்,இதே போன்று மலைபடுகடாமில்,

**“மா நிழற் பட்ட மரம் பயில் இறும்பின்,**

**ஞாயிறு தெறாஅ மாக நனந்தலை”(மலைபடுகடாம், அடி. 271-272)**

என்று கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

செவிலி கூறும் தலைவியின் இல்லறச் சிறப்பை, பாலை நிலத்தின்உலர்ந்த வெப்பத்தையுடைய கலங்கல் நீரை தவ்வென்னும் ஓசைபடகுடித்தாள் எனக் கூறுவதன் மூலம் விளக்கப்பட்டுள்ளது.உடன் போக்கில் சென்ற தலைவியைத் தேடிச் சென்ற செவிலியின்வருத்தம் புலப்படுத்தப்பட்டுள்ளது.செவிலியின் ஆற்றாமையை என் மகள் சென்ற வழியை நான் தொடர்ந்துஓடிவந்தும் அவளைக் காணமுடியவில்லை என்று கூறுவதன் மூலம்விளக்கப்பட்டுள்ளது.செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும் நிலை, நின்மகள் வீரக்கழலையும், வேலினையும் உடைய தலைவனோடு நட்பு கொண்டு,உடன்போக்குச் சென்று பின் மணம் புரிந்து கொண்டனர். இனி நீசெய்வது ஒன்றுமில்லை எனக் கூறுவதன் மூலம் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்றபின் செவிலித்தாய்அவளது இளமைத்தன்மையையும் பாலையின் வெம்மையையும் நினைத்துஇரங்குவாள்.தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்து வைக்க செவிலியிடம்கூறும் தோழியின் அறிவும், சொல்வன்மையும் பற்றி சங்க அகஇலக்கியங்கள் விளக்குகின்றன.செவிலி தலைவியை என்மகள் என்று கூறுவதும், நற்றாய் தலைவியைப்பேணிக் காத்தாள் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. செவிலி மகளின் எதிர்காலத்தை நினைத்து இரக்கம் கொள்வது சுட்டிக்காட்டப்படுகிறது.

செவிலித்தாய்க்குச் சில தனிப்பட்ட விழைவுகள் இருந்தமையைப்பாடல்கள் வழி அறியமுடிகிறது. என் மகள் நடப்பதற்கு எளிமையுடையதானவெப்பம் தணிந்த பருவத்தை உடன்கொண்டு செல்லாமல், வெப்பம் வருத்தகொடிய காட்டுவழி அழைத்துச் சென்றானே என்று தலைவனைக் கடிந்து கூறும்போது தலைவனோடு தலைவி செல்லும் நெறி அவளை வருத்தும் நெறியாகஅமையக் கூடாது என்றெண்ணும் செவிலியின் விருப்பம் புலனாகிறது.தலைவியின் மெல்லியல்பைச் செவிலி விரும்புவதால் இவ்விழைவு

ஏற்படுகிறதுஎனலாம். தலைவியைக் குழவிப் பருவம் முதல் அன்புடன் வளர்த்த செவிலிஅவள் பாலை வழியில் சென்ற பின்பும், அவளைத் தான் காக்க வேண்டும் என்றுவிழைகிறாள்.

**துணைநூற்பட்டியல்**


[1] இளம்பூரணர் (உரை). *தொல்காப்பியம் (பொருளதிகாரம்), பகுதி - 1.* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.

[2] இளம்பூரணர் (உரை). *தொல்காப்பியம் (பொருளதிகாரம்), பகுதி - 2.* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.

[3] விசுவநாதன், அ(உரை).*கலித்தொகை (மூலமும் உரையும்)*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[4] தட்சிணாமூர்த்தி, அ(உரை).*ஐங்குறுநூறு (மூலமும் உரையும்),* பகுதி-1, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[5] தட்சிணாமூர்த்தி, அ(உரை).*ஐங்குறுநூறு (மூலமும் உரையும்)*, பகுதி-2, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[6] நாகராசன், வி(உரை).*குறுந்தொகை (மூலமும் உரையும்)*, பகுதி-1, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[7] நாகராசன், வி(உரை).*குறுந்தொகை (மூலமும் உரையும்)*, பகுதி-2, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[8] பாலசுப்பிரமணியம், கு.வெ(உரை).*நற்றிணை (மூலமும் உரையும்),* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[9] செயபால், இரா(உரை).*அகநானூறு(மூலமும் உரையும்)*, பகுதி-1, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[10] செயபால், இரா(உரை).*அகநானூறு(மூலமும் உரையும்)*, பகுதி-2, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[11] தமிழ்ச்செல்வன், க(உரை).*நம்பியகப்பொருள்*, கௌரா பதிப்பகம், சென்னை, 2010.

[12] இராமமூர்த்தி, முத்து(உரை).*மலைப்படுகடாம் (மூலமும் உரையும்),* கௌரா பதிப்பகம், சென்னை, 2020.

[13] சடகோபராமாநுஜாசாரியர் (உரை).*திருவிருத்தம்*, மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை. ப.ஆ.இ.

[14] தண்டபாணி தேசிகர், ச(உரை).*திருக்கோவையார் மூலமும் உரையும்,* சாரதா பதிப்பகம், சென்னை, 2011.

[15] பிருந்தாஸ்ரீ, ஜெ. *சங்க இலக்கியத்தில் தாய்*, பாரதி & பாரதி பதிப்பகம், கிருஷ்ணகிரி, 2008.

[16] வரதராசனார், மு.*திருக்குறள் தெளிவுரை*, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,1994.

[17] வசந்தி, ச.“அகவாழ்வியலில் செவிலி”, *அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்*, Vol:2, ISSUE:5, ISSN: 2582-399X, ஜனவரி-2020.

[18] ஜோஸ்பின் புனிதா, அ.“தலைவியின் வாழ்வில் செவிலியின் பங்கு”, *வலைத்தமிழ்,* ISSN: 2581-7132, 09. Apr. 2013.

[19] தனலெட்சுமி, க. “சங்க இலக்கியத்தில் பெண் வாயில்களின் ஆளுமைப் பண்புகள்”, *International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR)*, E-ISSN: 2582-5313, Volume: 02 Issue: 01 January to March 2020, www.irjtsjournal.org

[20] முகிலரசி, கி. “சங்க இலக்கியத்தில் நால்வகைப் பெண்டிரின் பங்களிப்பு”, *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, மலர்-1, இதழ்-1, ஜூலை 2016, ISSN -2454-3993.


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR